# தூதன்

தூதன் 34 மே 2025 தூது 5

நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே. மத்தேயு 22:44




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை - தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| ஆயரம்மா மடல் | 04 |
| இராஸ் அல் கைமா போதகர் மடல் | 06 |
| ஆயரம்மா மடல் - இராஸ் அல் கைமா | 09 |
| ஃபுஜைரா போதகர் மடல் | 11 |
| ஆயரம்மா மடல் - ஃபுஜைரா | 14 |
| செயலர் மடல் | 16 |
| நீங்கள் கிறிஸ்தவரா! | 19 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| வேதவினா போட்டி | 23 |
| தெரிந்துகொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| தமிழ் வேதவகுப்பு - சிறுவர் பகுதி | 33 |
| Children’s Corner | 34 |
| Birthday Celebrants | 39 |
| Wedding Anniversary | 44 |
| ஆராதனைப் பாடல்கள் | 47 |
| பாரம்பரியப் பாடல்கள் | 48 |
| Remember the Duck | 49 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645

Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் திருச்சபை மக்கள் யாவருக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மைப் பாதுகாத்து வழிநடத்தி வந்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆண்டவர் தாமே நம்மோடிருந்து இப்புதிய மாதத்திலும் நம் திருச்சபையின் ஊழியங்களையும், நம் குடும்பங்களையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

ஃபுஜைரா, மற்றும் இராஸ் அல் கைமா சபைகளின் ஆயர்கள், நமது சபை நிர்வாகஸ்தர்கள், EC அங்கத்தினர்கள் மற்றும் அனைத்து ஊழிய பொறுப்பாளர்களையும் அன்புடன் வாழ்த்துகிறேன். கடந்த மாதங்களில் லெந்து கால ஊழியங்கள் மற்றும் ஈஸ்டர் பண்டிகை ஆராதனைகள் ஆசீர்வாதமாக அமைய ஆண்டவர் கிருபை செய்தார். இப்புதிய மாதத்திலும் நமது சபையின் ஊழியங்களை ஆண்டவர் ஆசீர்வதித்து தருவாராக. குறிப்பாக மே மாதத்தில் நடைபெறும் ஆண்கள் ஞாயிறு ஆராதனை, மருத்துவ ஊழியர் ஞாயிறு, திடப்படுத்தல் ஆராதனை மற்றும் JC Retreat ஆசீர்வாதமாக அமைய ஆண்டவர் கிருபை செய்வாராக. கோடை காலங்களிலும் தேவ கிருபை நம்மோடிருப்பதாக.

**ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான்: கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான். ஆதியாகமம். 26:12**

Isaac sowed seed in that land and in the same year reaped a hundredfold. The LORD blessed him. Genesis 26:12

கடிகார கடை உரிமையாளர் ஒருவர் இருந்தார். அவர் தனது சிறு வயதிலிருந்தே கடினமாக உழைத்து முன்னேறியவர். அவரிடம் இளைஞர் ஒருவர் வந்தார். தனக்கு கடிகார தொழிலின் நுட்பங்களை கற்றுத் தர வேண்டும் என்று கேட்டார். தானும் ஒரு கடிகார கடை ஒன்று வைத்து முன்னேற விரும்புவதாக தெரிவித்தார். உடனே உரிமையாளர் சமீபத்தில் நீ என்ன கனவு கண்டாய் என்று கேட்டார். உடனே இளைஞர், தனக்கு லாட்டரியில் ஒரு கோடி ரூபாய் விழுந்ததாக தான் கனவு கண்டதாக கூறினார். உடனே உரிமையாளர் நான் உனக்கு கற்றுத்தர இன்னும் நேரம் வரவில்லை, ஒரு மாதம் கழித்து வா என்று சொல்லி அனுப்பிவிட்டார். ஒரு மாதம் கழித்து மீண்டும் வந்தார் இளைஞர். இப்போ என்ன கனவு கண்டாய் என்று கேட்டார் உரிமையாளர். தனது தாத்தா இறந்து விட்டதாகவும் அவரது சொத்துக்கள் தனக்கு வருவது போன்றும் கனவு கண்டதாக கூறினார் இளைஞர். அவரை மீண்டும் திருப்பி அனுப்பி தற்போது நேரமில்லை, இன்னும் ஒரு மாதம் கழித்து வா என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

மீண்டும் ஒரு மாதம் கழித்து வந்த இளைஞர் வந்தவுடன் உரிமையாளரிடம் தான் ஒரு கனவு கண்டதாக சொன்னார். தான் ஒரு கடிகார கடையில் வேலை செய்வது போலவும், தான் ஒரு கடிகாரத்தை சரி செய்யும் போது கடிகாரத்தின் முட்களெல்லாம் தங்கமாக மாறுவது போன்றும் தான் கனவில் கண்டதாகச் சொன்னான். இப்போது அவரை வேலையில் சேர்த்துக் கொண்டு கடிகார கலையை அவருக்கு கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார் உரிமையாளர்.

ஆம். அன்பானவர்களே! நாம் வாழ்விலே முன்னேற வேண்டுமானால் நம்முடைய எண்ணம், முயற்சி மற்றும் அர்ப்பணிப்பு அதை நோக்கியே இருக்க வேண்டும். இதையே முன்னாள் குடியரசுத் தலைவர் Dr. அப்துல் கலாம் அவர்கள் "கனவு காணுங்கள்" என்று கூறுகிறார். ஆண்டவரும் அப்படி முழு அர்ப்பணிப்போடு முயற்சி செய்பவர்களோடு இருக்கிறார். அவர்களை ஆசீர்வதிக்கிறார். தியானத்திற்கென்று தெரிந்து கொண்ட வேத பகுதியில் ஈசாக்கினுடைய வாழ்விலே நடைபெற்ற சம்பவங்களைப் பார்க்கிறோம். பெலிஸ்தியருடைய தேசத்திலே ஆண்டவர் ஈசாக்கை எவ்விதமாக ஆசீர்வதித்தார் என்பதை இந்த வேத பகுதி நமக்கு கற்றுத் தருகிறது.

முதலாவது...

**1. உழைப்பவர்களை உருவாக்குகிறார்.**

ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான்

Isaac sowed seed in that land.

வேதத்தின் பல சூழ்நிலைகளில் நாம் பார்க்கும் போது ஆண்டவர் உழைப்பவர்களுக்கு துணை நிற்பதை நாம் பார்க்கிறோம். கானான் தேசத்தில் பஞ்சம் வந்த போது ஈசாக்கு பெலிஸ்தருடைய தேசத்தில் குடியிருக்கிறார். அந்த தேசத்தில் அவரை ஆசீர்வதிப்பதாக கர்த்தர் வாக்கு கொடுக்கிறார். ஈசாக்கு விதை விதைத்த போது ஆண்டவர் ஆசீர்வதித்து நூறு மடங்கு பலன் கொடுக்கிறார். ஆண்டவர் ஆசீர்வதிப்பார் என்று ஈசாக்கு சும்மாயிருக்கவில்லை. தானும் கடினமாக உழைக்கிறார். சும்மாயிப்பதை ஆண்டவரும் விரும்புவது இல்லை.

நீதிமொழிகள் 6:6 ல் "சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய் அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக் கொள்" என்று உழைப்பின் முக்கியத்துவத்தைக் கற்றுத்தருகிறார். மத்தேயு 20: 6 ல் "சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு" அவர்களை அழைத்து திராட்சைத் தோட்டத்திலே பணி அமர்த்தும் எஜமானாக ஆண்டவரை நாம் பார்க்கிறோம்.

இரண்டாவதாக...

**2. உழைப்பவர்களை உயர்த்துகிறவர்.**

கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால்

The LORD blessed him

உழைப்பவர்களை அறிந்து அவர்கள் சூழ்நிலைகளில் அவர்களுக்கு உதவி செய்து அவர்களை ஆண்டவர் உயர்த்துகிறார். ஈசாக்கு ஆசீர்வதிக்கப்பட அவருடைய உழைப்பு மாத்திரமல்ல ஆண்டவருடைய ஆசீர்வாதம் காரணமாக இருக்கிறது. எவ்வளவு தான் நாம் சுயமாக உழைத்தாலும் ஆண்டவருடைய ஆசீர்வாதம் இல்லாவிட்டால் நாம் உழைப்பின் பலனை பெற முடியாது. சங்கீதம் 128:4-ல் "இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாக ஆசீர்வதிக்கப்படுவான்" என்று வாசிக்கிறோம். ஆண்டவருக்குப் பயந்து நாம் உண்மையாக வாழும் போது நமது குடும்பம், நமது கைகளின் பிரயாசம், மனைவி, பிள்ளைகள் யாவற்றையும் ஆண்டவர் ஆசீர்வதிக்கிறார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் தேவனுக்கு பயந்த வாழ்க்கை அவர்களின் சந்ததியின் ஆசீர்வாதத்திற்கு காரணமாக இருந்தது.

மூன்றாவதாக...

**3. உழைப்பவர்களை உதாரணப்படுத்துகிறார்.**

கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்.

A farmer went out to sow his seed.

உழைப்பை விரும்புகிற ஆண்டவர், உழைப்பவர்களை உயர்த்துகிற ஆண்டவர், உழைப்பவர்களை பலவிதங்களில் முன்னுதாரணப்படுத்துகிறார். மத்தேயு சுவிசேஷத்தில் 13-ம் அதிகாரத்தில் விதைப்பவன் ஒருவனின் உவமை மூலம் வசனத்தை ஏற்றுக் கொள்ளுவதின் அவசியத்தைக் கற்றுக் கொடுக்கிறார். அதே அதிகாரத்தில் முத்து வியாபாரி ஒருவரை முன்னுதாரணப்படுத்துகிறார். ஆண்டவர் தன்னை திராட்சைத் தோட்டக்காரராக பல பகுதிகளில் உருவகப்படுத்துகிறார். இப்படி உழைப்பவர்களை மற்றவர்களுக்கு உதாரணமாக காண்பித்து உழைப்பின் முக்கியத்துவத்தை நமக்கு கற்றுத் தருகிறார்.

ஆம். அன்பானவர்களே! மே மாதம் 1-ம் தேதி உழைப்பாளர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த தேசத்தில் வந்து கடினமாக உழைக்கும் மக்கள் அனைவரோடும் ஆண்டவர் இருக்கிறார். அவர்களுடைய சூழ்நிலைகளையும் பிரச்சனைகளையும் ஆண்டவர் அறிந்திருக்கிறார். நாம் ஆண்டவரை உறுதியாய் பற்றிக் கொண்டு அவருக்குப் பயந்து நடக்கும் போது நிச்சயமாகவே ஆணடவர் நம்மை ஆசீர்வதித்து நடத்துவார். "என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள்" என்று ஆண்டவர் நமக்கு தந்திருக்கும் வாக்குத்தத்தத்தின் படி நம்மை தொடர்ந்து ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
Rev.K.சுதாகர்.
சபை போதகர்/தலைவர்.

## வேதாகமப் பெண்களில் மரியாளின் ஜெபம்

குறுகிய இந்த வாழ்நாளில் எப்போதும் நாம் நலமானப் பங்குகளைத் தெரிந்தெடுக்க முயற்சி செய்கிறோம். நல்ல வேலை வாய்ப்புகளையும், வாழ்க்கை வதிகளையும் கொடுக்கும் ஒரு படிப்பைப் படிக்க விரும்புகிறோம். அதற்காகவே ஜெபிக்கிறோம். நல்ல நண்பர்கள் மற்றும் நல்ல வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுக்க ஜெபிக்கிறோம். ஆனால் மரியாளோ எப்போதும் ஆண்டவரின் பாதத்தருகே அமர்ந்து போதனையைக் கேட்பதிலும், ஜெபிப்பதிலுமே நேரத்தை செலவிட்டாள். மரியாளின் குணநலன்களையும், அவள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதத்தையும் இந்த பகுதியில் பார்ப்போம்.

### யார் இந்த மரியாள்:-

மரியாள் என்பவள் மார்த்தாள், லாசருவின் சகோதரி. இயேசுவால் மிகவும் நேசிக்கப்பட்ட அங்கம் இவள். இவர்கள் பெத்தானியா என்னப்பட்ட ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள். பெத்தானியா ஊர் எருசலேமுக்குச் சமீபமாய் ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்திலிருந்தது. எருசலேமில் தனது கடினப்பணியை முடித்த பின்பு இயேசுவுக்கு இளைப்பாறும் இடமாக இவர்கள் வீடு இருந்தது. அங்கு வந்த இயேசுவின் பாதம் அமர்ந்து, வசனத்தைக் கேட்பதிலேயே அதிக கவனம் செலுத்தினாள் மரியாள். எப்பொழுதும் ஜெபம் மற்றும் இயேசுவின் போதனைகளைக் கேட்பதிலேயே அதிக நேரத்தை செலவிட்டாள். அதனால் மரித்த சகோதரனை உயிரோடு திரும்பப் பெற்றாள். இயேசுவின் பாதத்தில் பரிமளம் பூசும் பாக்கியத்தைப் பெற்றாள்.

### 1. சரியானதைத் தெரிந்தெடுக்கும் நேரம்:-

வாழ்வின் பல கால கட்டங்களில் சரியானவற்றைத் தெரிந்தெடுக்க பல சவால்களை சந்திக்கிறோம். அதே போலத்தான் அன்றைக்கும் வீட்டிற்குள் வந்த நல்ல போதகர் இயேசுவை உபசரிப்பதா அல்லது அவர் வாயிலிருந்து புறப்படும் கிருபையுள்ள வார்த்தையைக் கேட்பதா? எது சரியானது? உபசரிப்பதும் சரியானதுதான். ஆனால் ஆண்டவர் பாதத்தில் அமருவதற்கு வீட்டு வேலைகளோ, உபசரிப்போ தடையாக இருக்க கூடாது. மரியாளோ, அதில் நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள். ஆனால் ஆண்டவர் விரும்பியது அவர் பாதத்தில் அமர்ந்து சத்தியத்தைக் கேட்பதையே. ஆண்டவரிடம் அநேக நன்மைகளைப் பெற்றுக் கொள்கிறோம். ஆனால் அவரோடு உறவாட நேரம் செலவழிப்பது

இல்லை. ஆனால் மரியாளோ எப்போதும் ஆண்டவரோடே உறவாட நேரம் செலவழிப்பதிலே கருத்தாய் இருந்தாள். சரியானவற்றை தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்.

### 2. சவால்களைச் சந்திக்கும் நேரம்:-

இயேசுவின் பாதத்தருகே நாம் அமர்ந்திருக்கும்போது அநேக சவால்களை நாம் சந்திக்க வேண்டியிருக்கும். மரியாளுக்கும் அதேபோல அவளுடைய சகோதரன் லாசரு வியாதிப்பட்டு மரித்து விட்டான். அப்போது அவர்கள் இயேசுவிடம் ஆள் அனுப்புகிறார்கள். அவர் வர நான்கு நாட்கள் ஆகிவிட்டது. அப்போது மரியாள் இயேசுமீது குற்றம் சாட்டுகிறாள். நீர் எங்களோடு இருந்திருந்தால் இப்படி ஒரு காரியம் ஏற்பட்டிருக்காது. பலர் நீ இயேசுவோடு இருந்ததினால் என்ன பலன் என்று அவளை ஏளனம் செய்ததினால், இவள் இப்படி ஒரு குற்றத்தை இயேசுவின் மீது வைத்திருக்கலாம். ஆனால் அந்த சவாலான நேரத்தில் அவளை இயேசு கைவிடவில்லை. லாசருவை உயிரோடு எழுப்பி மரியாளை, சவால்களை எதிர்கொள்ள தேவன் கிருபை அளித்தார். மரியாள் நளதம் தைலத்தை இயேசுவின் மீது பூசும் போதும் அநேகர் இதை தரித்திரருக்கு விற்றுக் கொடுத்திருக்கலாம் என்று விமர்சித்தனர். அப்போதும் அந்த சவாலான கேள்விகளின் மத்தியிலும், இயேசு தரித்திரர்கள் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள், நான் எப்போதாவதுதானே இருக்கிறேன் என்று அவளைக் காப்பாற்றினார்.

### 3. சத்தியத்திற்கான நேரம் :

மரியாள், இயேசு எங்கெல்லாம் செல்கிறாரோ அந்த இடமெல்லாம் அவளால் இயன்ற மட்டும் அவர் பின்னே சென்று சத்தியத்தைக் கேட்பதிலேயே நேரம் செலவிட்டாள். தன் வீட்டுக் காரியங்களுக்குக்கூட அவள் அவ்வளவு நேரம் செலவிடவில்லை. தன் சகோதர, சகோதரியிடம் அதிகமாக உறவாடவில்லை. மற்றும் அவருக்கு சேவை செய்த நேரம்தான் அதிகம். அதனால்தான் அவருக்கு தைலம் பூசும் பாக்கியம் அவளுக்கு கிடைத்தது. வேதாகமத்தில் பாக்கியவான்கள் பட்டியலிலும் அவள் பெயர் இடம் பெற்றது. நாம் சத்தியத்திற்கு மற்றும் சத்தியத்தைக் கேட்பதற்கு நேரம் செலவிடும்போது தேவன் நமக்கு பெருத்த ஆசீர்வாதங்களைக் கொடுப்பார்.

நாமும் நம் வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுக்கும் போது, சரியானதைத் தேர்ந்தெடுப்பது, சவால்களைச் சந்திப்பது, சத்தியத்திலே எப்படி நடப்பது போன்ற கிருபைகளை தேவன் நமக்குத் தந்தருள்வாராக.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. ஸ்மைலி சுதாகர்
ஆயரம்மா, துபாய்.

# இராஸ் அல் கைமா போதகர் மடல்

அன்பிற்கினிய திருச்சபையின் அன்பர்களே, மரணத்தை மறுவாழ்வுக்கான வழியாக மாற்றி, உயிர்த்தெழுதலை நமக்கு உரிமையாகத் தந்த உயிர்ப்பின் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் அன்பின் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்! இதை அநேகரால் நம்பமுடியவில்லை. இயேசுகிறிஸ்து மரித்தார், அதோடு முடிந்தது என்று நினைத்தவர்களுக்கு அவர் உயிரோடு எழுந்ததை அவர்களால் நம்பமுடியவில்லை. இந்த உலகத்திலும் இப்பொழுதும் அநேகர் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழவில்லை, அதற்கான ஆதாரங்களை நான் தருகிறேன் என்று சொல்லி ஆராய்ந்தவர்கள் எல்லாரும் கடைசியில் இயேசுகிறிஸ்து நிச்சயம் உயிரோடு எழுந்தார் என்று சொல்லி முடித்தார்கள். ஆகவே சதாகாலங்களிலும் உயிரோடிருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் போதிக்கும் உண்மைகளை தியானிப்போம்.

**“இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகலநாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறான் என்றார்” மத்தேயு 28:20**

**கர்த்தாவே மரணத்தை நினைவுகூருகிறோம்:**

இந்த உலகத்து மனிதன் சொல்லுவது என்ன? ஒவ்வொரு நிமிடமும் மனிதன் கல்லறையை நோக்கி ஒடிக் கொண்டிருக்கிறான் என்று சொல்லுகிறான். ஆனால் இயேசு சொல்லுகிறார்: கல்லறை முடிவல்ல, மரணம் முடிவல்ல, அது ஒரு வாசல். ஒரு வாழ்க்கையிலிருந்து நித்திய வாழ்க்கைக்குள்ளாக கடந்து செல்லுகிற ஒருவாசல் என்று சொல்லுகிறார். அது எப்படி உண்மை என்பதை தன்னுடைய உயிர்த்தெழுதலினாலே அவர் நிரூபித்தார். மனிதனாய் பிறந்தார். மாம்சமும் இரத்தமும் உடையவராய் வாழ்ந்தார். அவர் மகிமையின் சரீரத்தோடு எழுந்திருக்கும் போது எனக்கும் அதே நம்பிக்கை உண்டு. மறுமை ஒன்று உண்டு, அது நிச்சயம் என்கிற அந்த உண்மையை இயேசுவின் உயிர்த்தெழுதல் உலகிற்கு காட்டியது.

எபிரேயர் 2:14 வசனத்திலிருந்து வாசிப்போம். “ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை

பண்ணும்படிக்கும் அப்படியானார்". மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்று ஒவ்வொருவரும் ஆர்ப்பரிக்கத்தக்கதாக மரணம் முடிவல்ல, அது ஒரு சோகமான அனுபவமல்ல, அது சந்தோஷமான காரியம், மரணம் ஒரு ஆசீர்வாதம் என்று தன்னுடைய உயிர்த்தெழுதலினாலே இயேசு நிரூபித்தார். ஆம், பிரியமானவர்களே! மரணம் ஒரு ஆசீர்வாதம், நான் மரித்தால் எனக்கு முன் மரித்த அத்தனை பேரையும் நான் சந்திக்க முடியும். இன்னும் அவர்களோடு பிரியாமல் இருக்க முடியும்.

## கர்த்தாவே உயிர்த்தெழுதலை அறிக்கையிடுகிறேன்

கிறிஸ்துவின் ஜீவியம் முழுவதுக்கும் அவர் உயிர்த்தெழுதலே பிரதானம். மற்றவை அற்பமென்று நாம் சொல்லுகிறதில்லை. அவரது அற்புத பிறப்பு விசேஷமே. அவரது மாசற்ற ஜீவியம் விசேஷமே. அவரது நிகரற்ற உபதேசம் விசேஷமே. அவரது பலத்த செய்கைகள் விசேஷமே. அவரது மரணமும் விசேஷமே. ஆகிலும் அவர் உயிரோடே எழுந்திராவிட்டால் இவைகள் யாவும் என்னத்துக்காகும்? தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து, என் சுவிசேஷத்தின்படியே, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவரென்று நினைத்துக்கொள். நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (2தீமோ.2:8, 1கொரி.15:3,4). என பவுலடியார் பறைசாற்றுகிறார். அவர் உயிரோடெழும்பாவிட்டால் நமக்குள் அவர் ஜீவனுமாய் இருப்பது எப்படி? ஆயிரமாயிரமான ஏழைப்பாவிகள் முற்றிலும் மாற்றப்பட்டு பரிசுத்தவான்களாவது எப்படி? கல்வியும் நாகரிகமும் உள்ளவர்கள் வாக்குவாதம் செய்யாத சாந்தமான பக்தர்களாவதெப்படி? மனுமக்கள் ஜீவியத்தில் விளங்கும் இந்த மகத்துவ வல்லமை எங்கேயிருந்து வந்தது. செடியும் கொடிகளும் ஒரே சாரத்தினால் பிழைக்கிறதுபோல கிறிஸ்துவும் விசுவாசிகளும் ஒரே ஜீவனால் இணைக்கப்பட்டிருக்கிறார்களே. இந்தப் பிராண ஐக்கியம் மரித்துப்போன கிறிஸ்துவை ஞாபகத்தில் வைக்கிறதினால் அல்ல, அவரே தமது ஆவியினால் நமக்குள் பிழைப்பதினால் அல்லவோ உண்டாகிறது. அவரது ஜீவியமும் மரணமும் எவராலும் மறக்கக்கூடாத சரித்திரமாயிருக்கிறது போலவே, அவர் உயிர்த்தெழுதலும் நிரூபிக்கக்கூடிய மெய்யான சம்பவமாயிருக்கிறது. அவருடைய மரணம் மாத்திரம் சுவிசேஷமல்ல. மரணம் உயிர்த்தெழுதலும் சேர்ந்ததே சுவிசேஷம். ஆகவே உயிர்த்தெழுதலை எப்போதும் அறிக்கையிட அழைக்கப்படுகிறோம்.

## கர்த்தாவே நீர் திரும்பி வர காத்திருக்கிறேன்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார்: "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகலநாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்" (மத்தேயு.28:20) "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." (யோவான்.14:3) என்றார். இயேசு உயிர்த்தெழவில்லையென்றால் இந்த விசுவாசம் வீணானதாயிருக்கும். இவரே எழும்பவில்லையே, இவரே போகவில்லையே, இவர் எப்படி எனக்கு பின்னால் ஒரு வாழ்க்கையை வாக்குப்பண்ணமுடியும் என்று நினைத்திருப்போம். ஆனால், இன்றைக்கோ அவர் மறுபடியும் வரப்போவது நிச்சயம் என்று நாம் அறிந்திருக்கிறோம். இந்த நிச்சயத்தைக் கொடுப்பது இயேசுவின் உயிர்த்தெழுதலே! அவர் வரும்பொழுது நியாயந்தீர்ப்பேன் என்கிறார். நியாயத்தீர்ப்பின் நிச்சயமும் இயேசுவின் உயிர்தெழுதலினால் நமக்குக் கிடைக்கிறது. பூமியிலே மரித்தவர்கள், அக்கினிக்கு இரையானவர்கள், கடலுக்கு இரையானவர்கள் அனைத்து மக்களும் உயிரோடு எழும்புவார்கள். எழும்பி சிங்காசனத்தில் வீற்றிருக்கும் இயேசுவுக்கு முன்பாக நிற்பார்கள். ஒவ்வொருவர் செய்த காரியங்களும் நினைத்த எண்ணங்களும் அந்தரங்கத்தில் செய்தவைகளும் ஒரு புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும். எழுதப்பட்டதின்படி அன்று நியாயத்தீர்ப்பு நடக்கும். அங்கே இரண்டில் ஒன்றுதான் ஒரு மனிதனுக்கு நடக்கும் ஒன்று நரகத்திற்கு போ அல்லது மோட்ச சந்தோஷத்துக்குள் வா, இந்த இரண்டுதான். ஒன்று சந்தோஷத்துக்குள் வா என்கிற மீட்பு அல்லது நரகத்திற்குள் தள்ளுண்டு போ என்கிற தீர்ப்பு. இது நிச்சயம்! இந்த நிச்சயம் நமக்கு எதைச் செய்கிறது? நம் வாழ்க்கையை பாதுகாக்க இயேசுகிறிஸ்து வரப்போவது உண்மை. நியாயந்தீர்க்கப்போவது உண்மை என்பதினால் நமது வாழ்க்கையில் ஒவ்வொரு காரியம் செய்யும்பொழுது அந்த நியாயத்தீர்ப்பிலே இந்த காரியத்தை நான் செய்தால் எப்படி நிற்பேன் என்கிற பயம் நமக்குள் இருப்பதனால் அது நம்முடைய வாழ்க்கையிலே சரியான பாதையிலே ஒரு பரிசுத்த பாதையிலே நடத்துகிறது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இந்த ஒரு காரியத்தையும் நமக்கு தருகிறது. ஆகவே உயிர்த்தெழுதலின் உண்மையான நோக்கத்தை பின்பற்றிட தூய ஆவியர் நமக்கு துணைபுரிகிறார். ஆமென்.

ஆண்டவரின் அருட்பணியில்,
அருட்பணி. எ.ஜெம்சன் ஜெபசிங்.
சபை போதகர் - இராஸ் அல் கைமா.

## இச்சையடக்கம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! உங்கள் அனைவருக்கும் புதிய மாதத்தின் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். நம் இந்திய தேசத்தில் “மே” மாதத்தை உழைப்பாளர்களின் தினமாக கொண்டாடுகின்றனர். அதனால் உழைப்பாளர் தின வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் இந்த மாதம் ஆவியின் கனியாகிய கடைசி கனி “இச்சையடக்கம்” பற்றி பார்க்க உள்ளோம். கிறிஸ்தவ வாழ்வில் ரொம்ப முக்கியமாக இருக்க வேண்டிய குணநலன்களில் ஒன்று “இச்சையடக்கம்”. ஆசையை துறக்க வேண்டும்.

“கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்” என்று கலா. 5:24-ல் பார்க்கிறோம். மனிதராகிய நமக்கு ஆசை என்பது இயல்பான விஷயம். நாம் பார்க்கும் பொருள் மீது வருவது இயல்பு. ஆனால் அந்த ஆசையால் வரும் விளைவை யோசித்து பின்பு அதை அடைய முயற்சிக்க வேண்டும்.

நீதி 23:1-8 பார்த்தோமென்றால், கண்களின் இச்சையை, ஆசையை குறித்து சொல்லப்பட்டு இருக்கும். “அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே” பசி இருக்கும்போது தின்பண்டங்கள் மீது ஆசை வருவது தவறில்லை, ஆனால் போஜன பிரியனாய் இருப்பது. தவறு. ஏதேன் தோட்டத்தில், பல வகை கனிகள் இருந்தபோதும், நன்மை தீமை அறியத்தக்க கனியை ஏவாள் சாப்பிட்டது, அது பார்வைக்கு அழகுள்ளதாய் இருந்ததால்.

கண்களின் இச்சை, உலகத்தில் பாவத்தை உருவாக்க காரணமாய் இருந்தது. மாம்சத்தின் இச்சை “தாவீதை” பாவத்தில் விழ வைத்தது. உலக ஐசுவரியத்தின் இச்சை ஒரு வாலிபனை நித்திய ஜீவன் பெற்றுக் கொள்ள தடையாய் இருந்தது. இப்படி ஆசையாகிய இச்சைக்குள் விழுந்து, தங்கள் வாழ்வின் ஆசீர்வாதத்தை இழந்து போனவர்கள் எத்தனையோ பேர்.

ஆனால், கிறிஸ்துவர்களாகிய நாம் இந்த ஆசைகளை துறந்து, ஆண்டவருக்கு முன்பாக ஒழுக்கமுள்ளவர்களாய் வாழவேண்டும் என்பதே, கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கும் காரியம், மத்.5:29,30 வசனங்களில், ஆண்டவர் நம் சரீரத்தை நரகத்திற்கு தப்புவிப்பது பற்றி கூறியிருக்கிறார். ஒரு அவயவம் பறிபோனாலும் அதில் தவறில்லை, ஆனால் நாம் முழுவதும் கெட்டுபோவது தகுதியாய் இராது.

இந்த இச்சைகளை எப்படி கையால்வது, ஆண்டவருக்கு பிரியமான வாழ்வை, எப்படி வாழ்வது? அதற்கு ஒரே வழி நாம் நம்மை முழுமையாய் கர்த்தரிடத்தில் கொடுத்து, அனுதினமும் ஜெபிக்க வேண்டும். அப்படி நாம் ஜெபிக்கும்போது அவர் நம் சரீரம் முழுவதையும் காக்க வல்லவராய் இருக்கிறார்.

அப்படிப்பட்டதான வாழ்க்கைக்குள் இருந்தாலேயே தானியேல் அந்நிய போஜனத்திற்கு தன்னை விலக்கிக் கொள்ள முடிந்தது, யோசேப்பு பாவ சரீர இச்சைக்கு விலக்கிக்கொள்ள முடிந்தது. ஏன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூட சாத்தானின் வார்த்தையில் இருந்து தன்னை காத்து கொண்டது, பிதாவுக்கு தன்னை கீழ்படுத்திதனாலேயே.

எனவே, நாமும் நல்ல நிலத்தில் விழுந்த விதை போல ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை நமக்கு முன்பாக வைத்து, எல்லா இச்சைக்கும் நம்மை விலக்கி காத்துக் கொள்ள அவர் நமக்கு உதவி செய்வாராக. ஆண்டவர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

திருமதி.வனிதா ஜெம்சன்
ஆயரம்மா - இராஸ் அல் கைமா.

## கற்போம் கிரேக்கம் - 4

### கிரேக்க மொழியின் மூன்றாம் எழுத்து

Gamma Γ - காம்மா என்பது கிரேக்க எழுத்துக்களின் மூன்றாவது எழுத்து ஆகும். இந்த வார்த்தை ஆங்கிலத்தில் G வார்த்தைக்கு ஈடானது.

γαστήρ - gastēr – Gastro - வயிறு

கேஸ்டர் - என்ற கிரேக்க வார்த்தைக்கு அநேக அர்த்தங்கள் உண்டு அதில் பிரதான அர்த்தம் வயிறு, மற்ற அர்த்தங்களை காண பார்க்கும்போதுகூட அவைகள் வயிற்றை சார்ந்து இருக்கிற காரியங்களை குறிக்கின்றன.

- வயிறு
- இரைப்பை
- கருப்பை
- வயிற்றுப்போக்கு
- ஒரு பெருந்தீனி

Gastroentrologist - ஒரு இரைப்பை குடல் மருத்துவர், இரைப்பை குடல் நோய்களில் நிபுணர் ஆவார். இரைப்பை குடல் நிபுணர்கள் உட்பட செரிமான அமைப்பில் உள்ள அனைத்து உறுப்புகளுக்கும் சிகிச்சை அளிப்பவர். வயிற்றுக்கும் வேதனைக்கும், இரக்கத்திற்கும் தொடர்புண்டு. அதனை இயேசுவின் வாழ்வோடு அறிந்துகொள்ள முற்படுவோம்

### இரைப்பையும் இரக்கமும்

இயேசுவின் இரக்கத்தின் மாதிரியை விவரிக்கும் கிரேக்க வார்த்தை Splanchnizomai ஆகும் இது ஒருவரின் குடல் அல்லது குடல்களை நகர்த்தும் உணர்வை குறிக்கிறது.இயேசுவின் இரக்கத்தால் அவர் தொடர்ந்து ஈர்க்கப்பட்டதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இதன் பொருள் வயிற்றின் பகுதிகளில் அசைவினை உணருதல், ஒருவரின் குடல்களுடன் தொடர்புடைய அசைவாகும். எனவே, இரக்கத்தால் அசைக்கப்படுதல், இரக்கம் கொள்ளுதல் எனப்படுவதாகும் ஏனென்றால் குடல்கள் அன்பு மற்றும் இரக்கத்தின் இருப்பிடமாகக் கருதப்பட்டன. இவைகள் எல்லாம் “வயிற்றின் அடிப்பகுதி” என்ற வெளிப்பாட்டைக் குறிக்கிறது.

துன்பத்தின் வலியை முடிவுக்குக் கொண்டுவரும் அல்லது குறைக்கும் ஒரு ஆதரவான செயலை நோக்கமாகக் கொண்ட அன்பு மற்றும் அனுதாபத்துடன் மற்றொருவரின் துன்பத்திற்குள் உடனிருக்க உந்த செய்யும் ஒருவரைத் தூண்டும் இரக்கத்தை இயேசு தன் வாழ்வின் வழியாக வெளிப்படுத்தினார். இயேசுவும் இப்படிப்பட்டதான ஒரு அனுபவத்தை வேதனைப்படுகின்ற பொழுதெல்லாம் அனுபவித்தார்

## இயேசுவும் இரக்கமும்

வேதனைப்படுகின்ற ஒரு குழந்தையின் மீது ஒரு தாயின் பரிவை போன்ற பரிவையும் இயேசு கொண்டிருந்தார். இயேசு எப்போதும் துன்பப்படுகிற , துயரப்படுகிற மக்கள் மீது மனம் இறங்குபவராக இருந்தார். இயேசுவின் இரக்கம் அவரின் இயல்பாகும் ,மனித அறியாமை, உடல் சோர்வு, துன்பம் மற்றும் மிக முக்கியமாக மனிதரின் ஆன்மீக வறுமையை மட்டும் இயேசு பாராமல் எப்பொழுதெல்லாம் அவரை மக்கள் தேடிவந்தார்களோ அல்லது திரளான கூட்டம் சேர்ந்ததோ அப்போதெல்லாம் அவர்களுக்கு ஆன்மீக உணவு மட்டும் தராமல் அவர்கள் மீது இரக்கம் கொண்டு அவர்களுக்கு உணவு கொடுக்க எப்போதும் வலியுறுத்தினார்.

இயேசுவின் இரக்கம் மக்கள் மீது எப்பொழுதும் இருந்தது , மக்கள் அவருடைய போதனையினை கேட்க கூடிருந்த வேளைகளில் அவர் எளிதாக அவர்கள் இல்லத்திற்கு செல்ல விட்டுயிருக்கலாம் ஆனாலும் இயேசு இரக்கமும் மனதுருக்கமும் உள்ளவராய் இருந்ததினால் அவர் தன்னுடைய சீடர்களை அவர்களுக்கு உணவு கொடுக்க கூறினார். இயேசு ஆன்மீக மற்றும் உடல் ரீதியான தேவைகளைப் புறக்கணிக்கவில்லை. உண்மையான இரக்கம், அன்பின் ஒரு வடிவமாக இயேசு இருந்தார். துயரமும் வேதனையும் நிறைந்த உலகம் கிறிஸ்துவைப் போன்ற இரக்கம்,அனுதாபம், மற்றும் மற்றவர்கள் மீது கருணை மற்றும் ஒரு உணர்ச்சிபூர்வமான அக்கறை கொள்ளவது அவசியம். ஆகையால் தான் தமிழ் மரபில் ஒருவருக்கு துன்பம் நேரிட்டால் அந்த செய்தியினை கேட்டு கர்ப்பமே கலங்கியது என்று சொல்லும் வழக்கு இன்றளவும் தமிழ் பேச்சு வழக்கில் உண்டு. வேதனை நிறைந்த காரியங்களை கேட்கின்றபோது வயித்தில நெருப்பை அள்ளிக்கொட்டியது போல இருக்கு என்று அதிர்ச்சியினை வெளிப்படுத்திகிற சொல்லாடலும் உண்டு. பதை பதைக்கும் காரியங்களை காணும்போது குடல் நடுங்கி போனேன் என்று சொல்லுகின்ற பழக்கமும் உண்டு.

மன அழுத்தம், பதட்டம் மற்றும் மனச்சோர்வு போன்ற வலுவான உணர்ச்சிகள் மூளையில் உள்ள ரசாயனங்களைத் தூண்டுகின்றன, அவை குடலில் வலியினை தூண்டி, பெருங்குடல் எதிர்வினையாற்றி IBS என்ற ஒரு நிலையினை அடைகிறது. வயிறு அசௌகரியமான நிலைக்கு தள்ளப்பட்டு ஒருவர் வயிற்றில் கலக்கம் ஏற்படும். இது இரக்கத்தின் ஓர் பிரதிபலிப்பாகும். இந்த வயிற்றின் உணர்ச்சிகளை கிறிஸ்துவும் அனுபவித்தார் அதன் ஊடாக பிறர் துன்பத்தில் துணை நின்றார். இரக்கத்தால் பாவிகளாகிய நம்மை இணைத்துக் கொண்டார். நாமும் இயேசுவை போல் பிறர் துன்பப்படுவதை கண்டு இயேசுவை போல துயரம் உற்றவர்களாய் இரக்கம் பாராட்டுவோமாக.

வசனம் : லூக்கா1:31

இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.

கிறிஸ்துவின் சேவையில்
அருட்திரு. ராஜ் குமார் ஜான் வெஸ்லி
ஆயர், தமிழ் திருச்சபை, ஃபுஜைரா



## வேதத்தில் பெண்கள் - 4

**பெயர்: பெபேயாள்** **திருமறைபகுதி : ரோமர் 16: 1,2**

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில், இரண்டு வசனங்களில் இப்பெண்ணைப் பற்றி பேசுகிறார். ரோமர் 16ம் அதிகாரத்தில், கிட்டத்தட்ட 26-லிருந்து 30 பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. அதில், 10 பெயர் பெண்களுடையது. மூன்றில் ஒரு பங்கு பெண்கள் இருந்திருக்கிறார்கள் ஆதி திருச்சபையில், பெண்களின் முக்கியத்துவத்தை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

பெபேயாள் என்ற பெயரின் அர்த்தம் நிலா. கிரேக்க தெய்வமாகிய ஆர்ட்டெமிஸ் என்ற தெய்வத்தை மகிமைப்படுத்த, இந்த பெயரை வைத்திருக்கலாம். கொரிந்து, கெங்கிரேயா பகுதிகளில், அதிகமாக வணங்கப்பட்ட தெய்வம் தான் ஆர்ட்டெமிஸ்.

பெபேயாளை பவுல், கெங்கிரேயா சபையின் ஊழியக்காரி என்று கூறுகிறார். இதை வைத்து அநேகர், “பவுல் பெபேயாளை உதவி செய்பவள் என்று தான் கூறினார், அவள் சபையின் தலைவர் அல்ல” என கூறுவார்கள். அது தவறானது. இங்கு ஊழியக்காரி என்ற வார்த்தைக்கு பவுல் பயன்படுத்திய கிரேக்க வார்த்தை, "Diakonos". - இதன் அர்த்தம் ஊழியக்காரி, சேவகர்.

நம்முடைய சகோதரியாகிய பெபேயாள் என பவுல் கூறுகிறார். “என் சகோதரியாகிய பெபேயாள்” என பவுல் கூறினாலே, அங்கு பெபேயாளை மரியாதையாக நடத்தி இருப்பார்கள். அவரோ “நம் சகோதரி” என கூறுகிறார். “கிறிஸ்துவுக்குள் நாம் எல்லாரும் சகோதர சகோதரிகள்” என வெறும் வாய் பேச்சாக பவுல் கூறவில்லை. அதனால்தான், எனக்கு சகோதரி என்றால் உங்களுக்கும் சகோதரி என கூறுகிறார். “சபை என்பது ஒரு குடும்பம்” என்று எல்லாரையும் அதில் இணைக்கிறார் பவுல்.

அநேகருக்கும், எனக்கும் கூட ஆதரவாயிருந்தவள் என பவுல் கூறுகிறார். இங்கே பவுல், பெபேயாளின் வாழ்க்கை தரத்தைக் கூறுகிறார். இந்த ஆதரவாயிருந்தவள் என்பதன் அர்த்தம், மூலபாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டால், “தங்கள் ஆஸ்திகளால் பிறரை தாங்கியவள்” என்பதாகும்.

அதாவது, தன் ஆஸ்தியை விற்று, மற்றவர்களுக்கு கொடுத்து உதவும் பண்புள்ள பெண். ஒருவேளை இந்த பெண், நல்ல பணக்கார பெண்ணாக இருந்திருக்கலாம் எனவும், அதே வேளையில் ஒரு விதவைப் பெண்ணாக இருந்திருக்கலாம் எனவும், அறிஞர்கள் கருதுகிறார்கள்.

பவுல் ஒரு பெண்ணிடம் கடிதம் கொடுத்து அனுப்புகிறார் என்றால், அந்த கடிதத்தின் உள்ளே உள்ள ஒவ்வொரு வசனங்களையும் கேட்டு ஏற்றுக்கொண்டவளாகத்தான் அவள் இருக்க வேண்டும். எனவே பெபேயாள் என்பவள், நிச்சயமாக மூல உபதேசங்களை பவுலின் அருகே அமர்ந்து, கேட்டு ஏற்றுக்கொண்டவளாகத்தான் இருந்திருப்பாள். வேதபுரிதல் அவளுக்கு அதிகமாக இருந்திருக்கும். கெங்கிரேயா சபையைப் பற்றி, தனது எந்த நிருபத்திலும் பவுல் கூறவில்லை. எப்படியும் அருகே இருக்கும் கொரிந்து பட்டணத்துக்கு இரு கடிதங்கள் வந்தபோது,(1,2 கொரிந்தியர்) அது நிச்சயமாக கெங்கிரேயா சபைக்கும் வந்திருக்கும். ஆனால், அந்த கடிதத்தில், கெங்கிரேயா பற்றி எதுவும் கூறாமல் இருப்பதால், “பெபேயாள் சபையை மிகவும் நல்ல முறையில் நடத்தி இருப்பார். அங்கே குற்றம் கண்டு பிடிக்க எதுவும் இல்லை. நல்ல தலைமையின் கீழ் இருந்ததால், பவுல் கெங்கிரேயா சபைக்கு எந்த கடிதமும் எழுதவில்லை என கூறுகின்றனர். “பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி அவளை ஏற்றுக்கொள்ளுங்கள்” என பவுல் கூறியிருக்கும் காரணம், பெண் என அவளை உதாசீனப்படுத்தி விடாதேயுங்கள். அவளை பரிசுத்தவானை ஏற்றுக்கொள்வதைப்போல ஏற்றுக்கொள்ளுங்கள் என்றார்.

பெபேயாளின் தலைமை என்பது, நல்ல தலைமையாக இருந்தது. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பெண்ணாக இருந்தாலும், ஆணாதிக்க சமுதாயத்தில் இருந்த பெபேயாள், தடைகளை உடைத்து, முன்னேறுபவளாகத்தான் இருந்திருப்பார். என்னதான், பிற தெய்வத்தின் பெயரை சுமந்தவளாக இருந்தாலும், தேவனால் எடுத்து பயன்படுத்தப்பட்ட சில பெண்களில் ஒருவராக இருப்பவள் பெபேயாள். தன்னிடமிருப்பதை கொடுத்து உதவினாள்.

இன்று பெண்களை ஒடுக்கும் கூட்டம் ஆணாக இருக்க அவசியமில்லை. ஒரு பெண்ணே பெண்ணின் வளர்ச்சியை தடுக்கும் காலம் இது. எது என்ன நடந்தாலும், பெபேயாளைப் போல முடிந்தவரையில் ஏழைகளுக்கு உதவி செய்வோம். வேதத்தை படித்து, நன்றாக புரிந்து கொண்டு அதன்படி நடப்போம். நிச்சயமாக கர்த்தர் நம்மை நாம் இருக்குமிடத்தில் தலைமையாக மாற்றுவார்.

கிறிஸ்துவின் சேவையில்
திருமதி பாலின் எமிமா
ஆயரம்மா, தமிழ் திருச்சபை, ஃபுஜைரா

# செயலர் மடல்

மகா பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், நித்தியமானவரும், சர்வ வல்லமையுள்ளவருமாகிய தேவாதி தேவனுக்கு கனமும் மகிமையும் செலுத்துகிறேன். நான்கு மாதங்களை தமது கிருபையினால் கடந்துவர அனுக்கிரகம் செய்த கர்த்தரைப் போற்றுகிறேன். 47 ஆண்டுகள் துபாயில் CSI திருச்சபையாக தேவனை தொழுது ஆராதிக்க தேவன் பாராட்டி வரும் தயவிற்காக நன்றி செலுத்துகிறேன். நமது சபையின் முன்னாள் ஆயர்கள், ஊழியர்கள், மூப்பர்கள், முக்கிய பொறுப்பாளர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். கருணையுள்ள தேவன் நம்மை நடத்தி வந்த அதிசய நடத்துதலுக்காக நன்றியுடன் போற்றுகிறேன். தியாக அன்பினால் நம்மை தம்முடைய திருரத்தத்தால் மீட்டெடுத்த கருணையை, கரிசனையை எண்ணி நன்றியுடன் கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். திருச்சபையாக தொழுது போற்றுவோம்.

கடந்த மாதத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளில் ஆலயத்தில் மாலை 7:00 மணிக்கும், சனிக்கிழமைகளில் Jebel Ali ஆலயத்தில் மாலை 7:00 மணிக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் St. Paul's Hall-ல் காலை 7:00 மணிக்கும், ஆராதனைகள் தவறாது நடைபெற கர்த்தர் கிருபை புரிந்தார். 27-04-2025 ஞாயிறு அன்று காலை 6:40 மணி முதல் 7:00 மணி வரை Ras Al Khor Prayer cell அங்கத்தினர்கள் துதிபாடல்கள் பாடினார்கள். Junior Church, Cornerstone, Youth Fellowship, Mens Fellowship, Womens Fellowship, தமிழ் வகுப்புகள், முகாம் சந்திப்பு ஊழியங்கள், உபவாச ஜெபம் மற்றும் Area Prayer Cell ஊழியங்கள் யாவும் தவறாது நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கே கனமும், மகிமையும், புகழும் செலுத்துகிறேன்.

கர்த்தருடைய மேலான கிருபையால் 06-04-25 ஞாயிறு திருவிருந்து ஆராதனையில் CSI Tirunelveli Diocese போதகர் Rev. Joseph அவர்கள் கலந்து கொண்டு இறைசெய்தி வழங்கினார்கள். 13-04-25 ஞாயிறு காலை குருத்தோலை பவனி ஆராதனையில் CSI Chennai Diocese முன்னாள் பேராயர் Rt. Rev. Dr. Devasahayam ஐயா அவர்கள் இறை செய்தி வழங்கினார்கள்.

14, 15, 16 திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் இரவு 8:00 மணி முதல் 10:00 மணி வரை பரிசுத்தவார ஆராதனை நடைபெற்றது. அதில் நமது Fujairah கிளைச்சபை முன்னாள் ஆயர் Rev. Allwyn Bright ஐயா அவர்கள் கலந்துகொண்டு இறை செய்தி வழங்கினார்கள். 17-04-25 அன்று வியாகுல வியாழன் ஆராதனை இரவு 8:00 மணிக்கு திருவிருந்து ஆராதனையுடன் நடைபெற்றது. 18-04-25 வெள்ளி அன்று இரவு 7.30 மணிக்கு சிலுவை தியான ஆராதனை நடைபெற்றது. ஆராதனையில் Rev. Allwyn Bright ஐயா அவர்களும், CSI Chennai Diocese முன்னாள் பேராயர் Rt. Rev. Dr. Devasahayam அவர்களும், CSI Kanyakumari Diocese பேராயர் Rt. Rev. Dr. A. R. Chelliah அவர்களும், நமது போதகரோடு இணைந்து சிலுவை தியான இறை செய்தியை வழங்கினார்கள்.

20-04-25 அன்று காலை 5.30 மணி முதல் 07:30 மணி வரையும், தொடர்ந்து 8:30 மணி முதல் 10:00 மணி வரை ஈஸ்டர் பண்டிகை ஆராதனை திருவிருந்து ஆராதனையுடன் சிறப்பாக நடைபெற்றது. Rev.Allwyn Bright ஐயா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தி வழங்கினார்கள். South Kerala Diocese போதகர் Rev. Bright அவர்களும் கலந்து கொண்டு ஆராதனையை சிறப்பித்தார்கள்.

நமது சொந்த தேசத்தில் கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் செய்யப்படும் மிஷனரி பணிகளுக்காக, மிஷனரி சங்கங்கள், மிஷனரிமார்களுக்காக அதிக பாரத்தோடு ஜெபிப்போம். நமது திருச்சபை பற்பல மிஷனரி ஸ்தாபனங்கள் மூலம் 100 மிஷனரிமார்களை தாங்கத்தக்கதாக கர்த்தர் நமக்குத் தந்த மேலான கிருபைகளுக்காக கர்த்தரைத் துதிக்கிறேன்.

மேலும் 15 ஊழிய ஸ்தாபனங்களுக்கு உதவிகள் செய்ய கர்த்தர் பாராட்டி வரும் கிருபைகளுக்காகவும், மிஷனெரி சிறுவர்களின் கல்வி சம்மந்தமாக மேலும் பற்பல நிலைகளில் சரீர குறைபாடுகள் உள்ளவர்களுக்கு உதவிகள் செய்வதன் மூலமாகவும், திருச்சபையாக ஜெபத்தோடு தாங்கிட கர்த்தர் பாராட்டிவரும் தயவுகளுக்காகவும் கர்த்தரை முழு மனதோடு ஸ்தோத்தரிக்கிறேன்.

கொளகூர் மிஷனரி மருத்துவ பணித்தளத்தில் நமது திருச்சபை தாங்கி வரும் மருத்துவமனை மருத்துவ பணிகளுக்காகவும் அங்கு பணிபுரிந்து வரும் Dr.Melchis மற்றும் Dr.Mrs.Daphni அவர்களின் அர்ப்பணிப்புகளுக்காகவும் தொடர்ந்து பாரத்தோடு ஜெபிப்போம். மருத்துவமனையைச் சுற்றியுள்ள கிராம மக்களின் இரட்சிப்புக்காகவும் தவறாது ஜெபிப்போம்.

மே மாதம் 18-ம் தேதி ஞாயிறு அன்று நடைபெறும் திடப்படுத்தல் ஆராதனைக்காக, திடப்படுத்தல் பெற இருக்கும் நம் சபைகளின் பிள்ளைகள், பெரியவர்களுக்காக, திடப்படுத்தல் ஆராதனையை நடத்தித்தர வர இருக்கும், பேராயர் அவர்களுக்காக சபையார் ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கர்த்தர்மேல் மட்டும் நம்பிக்கையுடன் தொடர்ந்து திருச்சபையாக நாம் கர்த்தரை நோக்கி ஏறெடுத்து வரும் ஜெபத்திற்கு நிச்சயம் கர்த்தர் ஜெயம் தருவார். CDA அதிகாரிகள் மூலம் கிடைக்கவேண்டிய Worship License மற்றும் Bank Account open செய்ய அனுமதியும் கிடைக்க கர்த்தர் கிருபை பாராட்டுவார். கர்த்தர் மீதுள்ள நம்பிக்கை ஒரு போதும் வீண் போகாது. ஜெபமே ஜெயம். கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார். Praise be to God Almighty.

Moses Vijaya Kumar, Secretary.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"எஜமான்களே, உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து, வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமானதைச் செய்யுங்கள்."

கொலோசெயர் 4:15

உலகுக்கு
உலகிலுள்ள
உயிர்களுக்கு
நம்..
எல்லோருக்கும்
தேவாதி தேவனாகிய
பரம பிதாவின்...
அருள் ஆசி
கிடைத்துவிட்டால்..
பிதாவே...
உலகமாகவும்
உயிர்களாகவும்
பரிணமிக்கிறார்
என்பது புரியும்.
எல்லாமாக
பிதாவே... தாமே..
ஆகியிருக்கிறார்
என்பதை
உணர முடியாதவர்
உண்டுமா...? என்ன
எல்லோர் உள்ளத்திலும்
உறைகிறார்
அவரிடமே இருந்து
பிறக்கிறது.
இயேசுவுக்குள்
எல்லாவற்றையும்
பாருங்கள்
தண்ணீரே
கண்டிராத
பாலைவனத்தில்
தாகத்துக்கு
தண்ணீர்
தந்தவரும்
இயேசுவே.

அன்பரே...
பிறப்பொத்த
மனிதரின்
சிறப்பொத்த
தகுதிகளை
நிறைகளை
இயேசுவே
தருகிறார்.
அதில் ஒன்று
எஜமான்கள்.
நானே எஜமான்
என்று இறுமாப்பு
வேண்டவே
வேண்டாம்.
பரலோகம்
உண்டு என்பதும்
அது சத்தியம்
என்பதும் இதுவே
நித்தியம்
என்பதும் அறிவீரா..
அங்கே
அனைவருக்கும்
தந்தையாக
எஜமானராக
பரமபிதா
வீற்றிருக்கிறார்
உணர்கிறீர்களா.
ஆக
வேலைக்காரருக்கு
அநீதி இழைக்காது
நீதியையும்
அவர்களது
தேவைகளையும்
சேவ்வனே
செய்யுங்கள்

எஜமானருக்கும்
எஜமானாக்
இருக்கின்ற நமது
பிதா
நம் எல்லோருக்குமே.
எஜமானவராகிறார்
மறவாதீர்.
இன்று உலகெங்கும்
தொழிலாளர் தினம்.
[MAY DAY]
கொண்டாடுகிறார்கள்.
அவர்களோடு
இணைந்து
நல்லதை செய்வோம்.
நாளெல்லாம்
மகிழ்வோம்.
எனக்கு
யாருமே இல்லை
என்று எண்ணாது
இயேசுவே
எனக்கு எல்லாம்
என்று எண்ணுங்கள்
வறுமையும்
சிறுமையும்
ஓடிவிடும்
வளமான வாழ்வு
கூடிவரும்.
இயேசு வேறு
உலகம் வேறு
என்று எண்ணாது
இயேசுவே உலகம்
சதா காலமும்
இயேசுவையே
துதி மனமே.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

## திருச்சபை ஜெபநாள் 04-05-2025 (முதல் ஞாயிறு)

"அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." மத்தேயு 18:19

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

### துதிகள்

- கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் அருளிய கிருபைகளுக்காக துதிப்போம்.
- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலன், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- நம் பணிகள், தொழில்கள் மற்றும் பிரயாணங்களில் ஆண்டவர் அருளிய பாதுகாப்பிற்காக துதிப்போம்.
- ஏப்ரல் மாதம் நடைபெற்ற Holy week convention மற்றும் Easter பண்டிகை ஆராதனைகள் ஆசீர்வாதமாக அமைந்ததற்காக துதிப்போம்.
- பிள்ளைகள் புதிய கல்வி ஆண்டுக்குள் பிரவேசிக்க கர்த்தர் தந்த கிருபைகளுக்காக துதிப்போம்.

### திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்
- ஃபுஜைரா, இராஸ் அல் கைமா சபைகளின் ஊழியங்களுக்காக, சபை வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- திடப்படுத்தல் பெற ஆயத்தப்படும் பிள்ளைகளுக்காக

- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனெரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனெரி ஸ்தாபனங்களுக்காக,
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக,
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனையின் மருத்துவர்களுக்காக, அவர்கள் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
- மே மாதம் நடைபெறும் ஆண்கள் ஐக்கிய சங்க சிறப்பு ஆராதனை, மருத்துவ ஊழியர் ஞாயிறு, திடப்படுத்தல் ஆராதனை மற்றும் JC Retreat ஆசீர்வாதமாக அமைய ஜெபிப்போம்.
- காஷ்மீர்-பகல்ஹாம் தீவிவாத தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக ஜெபிப்போம். தீவிரவாத செயல்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

## இந்திய நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் ஆட்சியாளர்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வேளாண்மை (விவசாயி) களுக்காக, அனைத்து சமயத்தாரும் ஒற்றுமையாக இருக்க, மனித நேயமும், வறட்சி நீங்க, இயற்கை வளங்கள் பாதுகாப்புக்காக, மழைநீரை பாதுகாத்து பயன்படுத்த ஜெபிப்போம்.
- இந்திய அரசு பாரபட்சமில்லாமல், நடுநிலையோடு ஆட்சி செய்ய
- வேற்றுமைகள் ஒழிந்து சமத்துவம் வளர, மத தீவிரவாத அமைப்புகளின் மனமாற்றத்திற்காக
- தேசம் முழுவதும் எல்லை பாதுகாப்புக்காக
- தேசத்தில் நடைபெறும் அனைத்து மிஷனெரி ஊழியங்களுக்காக

## ஐக்கிய அரபு நாடுகள் (UAE) தேசங்களுக்காக ஜெப வேண்டுதல்கள்

- UAE தேசங்களில் வசிக்கும் மக்கள் நல்வாழ்வுக்காக
- அரசர் குடும்பங்களுக்காக
- நல்ல வேலை வாய்ப்புக்காக, வேலை தேடி வருபவர்களுக்கு வேலைகள் கிடைக்க
- வேலை வாங்கித் தருவதாக ஆசை காட்டி அழைத்து வந்து ஏமாற்றப்படுவோருக்காக
- UAE-ல் உள்ள CSI திருச்சபை ஊழியங்களுக்காக
- UAE-ல் நடைபெறும் அனைத்து திருச்சபைகள் ஊழியங்களுக்காக
- அனைவருக்கும் ஆண்டவரின் நற்செய்திக்காக
- அனைத்து சமயத்தாரும் சமாதானத்துடன் ஒற்றுமையாக வாழ
- சாலை விபத்துகள் தவிர்க்கப்பட, வாகன ஓட்டிகளின் பாதுகாப்புக்காக

## உலக நாடுகளுக்காக ஜெப வேண்டுதல்கள்

- உக்ரைன் - ரஷ்யா போர் சமாதானத்திற்காக
- இஸ்ரவேல், பாலஸ்தீனம், லெபனோன், ஈரான் தேசங்களுக்காக
- உலக நாடுகள் சமாதானத்திற்காக
- பருவநிலை மாற்றத்திற்காக, Forest தீவிபத்துக்கள் தவிர்க்கப்பட
- உலகம் முழுவதும் நடைபெறும் ஆண்டவரின் திருப்பணிக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் தேவ கிருபைக்காக ஜெபிப்போம்.
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக ஜெபிப்போம்.
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத்திற்காக மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக ஜெபிப்போம்.
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்.
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெறவும் ஜெபிப்போம்.
- கல்வி கற்றுவரும் எல்லா மாணவர்களுக்காகவும், உயர்கல்விக்காக தாயகம் மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- ஒவ்வொரு வாரமும் நடைபெறுகின்ற camp ஊழியங்களுக்காக
- CDA அங்கீகாரத்திற்காக, Dubai தேசத்தில் CSI Tamil Parish ஆலயம் எழுப்ப ஜெபிப்போம்.
- தொழில் மற்றும் வேலைவாய்ப்புக்காக பிற நாடுகளுக்கு பயணம் செய்யும் நமது திருச்சபை மக்களுக்காக ஜெபிப்போம்.
- புதிதாக திருமணமானவர்கள் மற்றும் கணவன் மனைவி சரியான புரிந்துகொள்ளுதலுக்காக, குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

(ரோமர் 1-16)

கீழ்கண்ட வினாக்களுக்கு ரோமர் 1-16 அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. யார் யூதன்?
2. "இல்லை" என்று சொல்லும் நான்கு பேர் யார்?
3. எது கடன்?
4. யாருக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை?
5. 7000 + 1 = ?
6. நாம் நாட வேண்டியது எது?
7. தரித்துக் கொள்ள வேண்டியது எது?
8. எது தேவனுடைய ராஜ்யம்?
9. பொறுமையை உண்டுபண்ணும் இரண்டு யாவை?
10. பவுலுடன் கட்டுண்டவர்கள் யார்?

## ஏப்ரல் 2025 வேதவினா போட்டி விடைகள்

1. ஸ்தேவான், பிலிப்பு, பிராகோர், நிக்கானோர், தீமோன், பர்மெனா, நிக்கொலா. (அப்போ. 6:5, 21:8)
2. அனனியா (அப்போ. 22:12)
3. பிரதான ஆசாரியனான அனனியா. (அப்போ. 23:2,3)
4. பேலிக்ஸ், பெஸ்து (அப்போ. 24:27, 25:9)
5. பேலிக்ஸ் (அப்போ. 24:24)
6. கிறிஸ்துவின் பாடு மரணம் உயிர்த்தெழுதல் (அப்போ. 26:23, 26)
7. போஜனம் (அப்போ. 27:34)
8. மெலித்தா தீவார். (அப்போ. 28:2)
9. பிரதான ஆசாரியனான அனனியா. (அப்போ. 23:3)
10. எபிரேயு, கிரேக்கம். (அப்போ. 21:40, 21:37)

## திருமறைப் பாட ஒழுங்குகள் - மே 2025

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 04-05-2025 | உயிர்த்தெழுந்த ஆண்டவருடன் திருமறையை மறுஆய்வு செய்தல் | 2 நாளாக. 34:29-33 | அப்போ. 8:26-40 | லூக்கா 24:13-27 | 19 |
| 11-05-2025 | உயிர்த்தெழுந்த ஆண்டவரின் திருக்கட்டளை | எரேமியா 9:1-10 | 1 தீமோத். 4:6-16 | யோவான் 20:19-23 | 47 |
| 11-05-2025 | மருத்துவ ஊழியர் ஞாயிறு | 2 இராஜா. 20:1-7 | கொலோ. 4:12-18 | லூக்கா 4:16-22 | 41 |
| 18-05-2025 | திடப்படுத்தல் ஆராதனை | எசேக்கி. 36:26-28 | ரோமர் 8:12-17 | யோவான் 14:15-17 | --- |
| 18-05-2025 | சத்தியமாகிய கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை | யாத்தி. 34:1-9 | எபேசியர் 4:7-16 | யோவான் 17:6-19 | 119:89-96 |
| 25-05-2025 | கிறிஸ்துவின் தன்மையோடு ஊழியம் செய்தல் | 2 இராஜா. 2:9-16 | அப்போ. 7:54-60 | மத்தேயு 28:16-20 | 105:1-11 |
| 25-05-2025 | Junior Church Sunday | 1சாமுவேல் 3:1-10 | எபேசியர் 6:1-4 | மாற்கு 10:13-16 | 127 |

## ஏப்ரல் 2025 வேதவினா போட்டி பதில் எழுதியவர்கள்

1. திருமதி. அனித்தா ஆல்வின்
2. திருமதி. லதா ராஜன்
3. திருமதி. ஐரிஸ் பொன்கிறிஸ்டோபர்
4. திருமதி. ரூபி ஞான காந்தி
5. திருமதி. ஷெலினா அஷோக்
6. திருமதி. மெர்சி ஜேம்ஸ்
7. திருமதி. செல்லா ஆலன்
8. திருமதி. சத்திய வினோதா கிறிஸ்டோபர்
9. திருமதி. நிர்மலா பேட்ரிக்
10. திருமதி. ரோஸ்லின் ஜெயகுமார்
11. திருமதி. ஷீபா சிகாமணி
12. திருமதி. பெமி டார்வின்
13. திருமதி. ஜெரிபா விவேக்
14. திருமதி. ஜெயகிருபா சாலொமோன்
15. திருமதி. ஜெனிபா அருண்ராஜா
16. திருமதி. ஜெனிபர் ஜாஸ்மின்
17. திருமதி. பெனிலின் ஜெபின்
18. திருமதி. ரோஸ்லின் இம்மானுவேல்
19. திருமதி. மரோலின் நிக்சன்
20. திருமதி. கோகிலா பிரியா சாம்
21. திருமதி. ஜெப ஷீபா ஜெயசீலன்
22. திருமதி. ஷீபா ஞான வின்ஷா ஸ்பர்ஜன்
23. திருமதி. பிரின்சி லிகோ ஜேம்ஸ்
24. திருமதி. விஜிதா ஷாஜன்
25. திருமதி.செல்வரதி ஆபிரகாம்
26. திருமதி. சில்வியா டேவிட்
27. திரு. V. மோகன்
28. திருமதி. அக்ஷா மெர்லின்
29. திருமதி. ஷிபு அர்ஜூனன்
30. திருமதி. ஜெரின் ஜெ.ஃப்ரி
31. திருமதி. ஆஷா ஜான்சிலி
32. திருமதி. இனிதா ஜோனா
33. திருமதி. சாந்திலின் சால்பின்
34. திருமதி. ஷீஜா ஜெயசிங்
35. திருமதி. ஷாமினா பென்னி
36. திருமதி. கிருபா ஜான்சன்
37. திரு. டேவிஸ் ஜெயக்குமார்
38. திருமதி. அனிதா ஜெயராஜ்
39. திருமதி. சோபியா ராணி ஜெயசேகர்

# தெரிந்து கொள்வோம்

## பாடல் பிறந்த வரலாறு

Rev. ஐசக் வாட்ஸ்



Rev. ஐசக் வாட்ஸ் அவர்கள் 1674-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் நாள் இங்கிலாந்து நாட்டில் உள்ள சவுத்தாம்ப்டனில் பிறந்தார். இவரது தந்தை ஒரு ஆசிரியர். தனது நான்காவது வயதில் லத்தீன் மொழியைக் கற்க தொடங்கினார்.

Rev. வாட்ஸ் சவுத்தாம்ப்டனில் உள்ள கிங் எட்வர்டு பள்ளியில் கல்வி கற்றார். லத்தீன், கிரேக்கம் மற்றும் எபிரெய மொழிகளை கற்றுக்கொண்டார்.

சிறுவயது முதல் சிறுவர்களுக்கான குறும்பாடல்களை எழுதுவதில் புலமை பெற்றிருந்தார். லண்டனில் உள்ள ஸ்டோக் நியுஷங்டனில் உள்ள டிஸென்டிங் அகாடமியில் படித்தார். 1699-ம் ஆண்டு ஃப்ரீடியில் உள்ள தேவாலயத்தில் முதல்முதலாக தேவசெய்தி பிரசங்கித்தார். 1702-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் முழுநேர போதகரோடு தனது பணியை ஆரம்பித்தார்.

